**நாள்: 17.02.2022**

**அசல் வழக்கு எண்:67/2016**

பி.சா.1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-

வெள்ளிலை பத்திரம் எழுதும்போது சேகர் ரதி ஆகியோர் தங்களுக்கு சர்வே எண்.199-ஏபி/9பி-ல் 0.09.5 ஏர்சைவிட தங்கள் அனுபவத்தில் கூடுதலாக 11 குழி நிலம் உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதும் காண்பித்தார்களா என்றால் இல்லை வாய்மொழியாகத்தான். கிரயம் வாங்கியதற்கு முன்பாகவே கூடுதலாக 11 குழி நிலம் இருப்பது சம்மந்தமாக சர்வேயர் வைத்து அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்க்கவில்லை. வெள்ளிலைப் பத்திரத்தை சட்டப்படி பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்ய முடியாது என்று சொன்னார்கள் அதனால் பதிவு செய்யவில்லை. உண்மையிலேயே 11 குழி நிலம் என் மகன் சிலம்பரசனிடம் விற்பனை செய்த சேகர் மற்றும் ரதி உரிமையாளராக இருந்திருந்தால் அதற்கான உரிய ஆவணம் இருந்திருக்கும் சட்டப்படி பதிவு செய்திருக்கலாம் அது இல்லை என்பதால்தான் மோசடியாக 07.09.2015 தேதியிட்ட அனுபவ பாத்திய விடுதலைப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றால் தனலெட்சுமிக்கு அனுபவப்பாத்தியமில்லை கிராமத்தில் வரப்புப்படிதான் சேகரின் அனுபவ நிலத்தை அளந்து வாங்கினோம். கூடுதலாக உள்ள 11 குழி நிலத்திற்கு ஏதும் வருவாய் துறையில் ஆவணங்கள் அரசிடமிருந்து பெற்றுள்ளேனா என்றால் இல்லை வெள்ளிலை பத்திரம்தான் உரிய ஆவணமாக உள்ளது. நான் சேகர் மற்றும் ரதியிடமிருந்து கிரயம் பெற்ற சர்வே எண்.199-ஏபி/9பி-ல் 0.09.5 ஏர்சைவிட கூடுதலாக 9குழி நிலம் நாங்கள் கிரயம் வாங்கியதாக சொல்லப்படும் இடத்திற்கு வெள்ளிலை பத்திரத்தை தவிர வேறு ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. வெள்ளிலைபத்திரத்தைவிட கூடுதலாக 2 குழி சேர்த்து 11 குழி நிலத்த பத்திரம் ஏற்படுத்தி மோசடியானது என்றாலும் வாதியின் நிலத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது சர்வே எண்.199-ஏபி/9பி-ல் 0.09.5 ஏர்சைவிட கூடுதலாக உள்ள நிலம் வாதிக்கு சொந்தமானது என்றாலும் சட்டவிரோதமாக

ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு சர்வே எண்.199-ஏபி/8ல் 0.28 ஏர்சைசும் சர்வே எண்.199-ஏபி/14-ல் 0.33.1/3 ஏர்சும் ஆக கூடுதல் 0.61.1/3 ஏர்ஸ் சொந்தம் என்பதால் அந்த சொத்துகளில் ஒரு பகுதியை வாதியின் வழக்குரையில் சுட்டக்காட்டப்பட்டுள்ள ABCD மற்றும் EFGH பகுதி நிலத்தை நானும் சேகர், ரதி ஆகியோர் சேர்ந்து மோசடியாக ஆவணம் ஏற்படுத்தி சட்ட விரோதமாக அபகரித்துள்ளோம் என்றால் சரியல்ல.